ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2139 - 2019 අගෝස්තු මස 30 වැනි සිකුරාදා - 2019.08.30

*2139 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 2224 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 2220 | ஏல விற்பனைகள் | 2226 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 2221 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** நிதி சட்டமூலம் 2019, ஓகத்து மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2219 - B 81555 - 5,403 (2019/08)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## மாவட்ட நீதிவான் நீதிமன்றம் - முல்லைத்தீவு

*நீதிமன்றில் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் ஏல விற்பனை 2019*

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் அரசுடமை யாக்கப்பட்ட பொருட்கள் 2019.09.21 ஆந் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

02. குறிப்பிட்ட பொருட்கள் தொடர்பாக உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் ஏல விற்பனைத் தினத்தில் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. பதிவாளரின் அனுமதி பெற்று ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் ஏல விற்பனைக்கென குறிப்பிட்ட பொருட்களை பொது மக்கள் பார்வையிடலாம்.

04. நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் தகுந்த தொகை யானது விற்பனையின் போது ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் மன்றின் விருப்பு உரிமையின் பிரகாரம் அப்பொருட்களின் ஏல விற்பனையிலிருந்து நீக்கி விடுவதற்கான உரித்தை மன்று கொண்டுள்ளது.

05. ஏல விற்பனையின் போது ஏலத்தில் வாங்கப்பட்ட பொருட்களுக்கு உடனடியாக பணம் செலுத்தப்பட்டு நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். மேலும் எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாக செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

06. பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

செ.லெனின் குமார்,
மாவட்ட நீதிபதி/நீதிவான்,

மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்,
முல்லைத்தீவு.

பகிரங்க ஏல விற்பனை - 04-2019

| இல. | வழக்கு இலக்கம் | பொருட்கள் |
|---|---|---|
| 1. | 6541 | பெற்றோல்மக்ஸ் (Petrol Max) -1 |
| 2.<br>3.<br>4. | 23693 | படகு (OFRP - A - 0724 - NBO) -1<br>இயந்திரம் யமகா 10038 - 1<br>மின்பிறப்பாக்கி - 01 |
| 5.<br>6.<br>7. | 29877 | மின்பிறப்பாக்கி - 02<br>GPS கருவி - 1<br>படகு (OFRP - A - 1745PTM) - 1 |
| 8.<br>9.<br>10. | 30306 | படகு (OFRP - A - 1101MLT) -1<br>இயந்திரம் (SUZIKI 25 hp - 110724) -1<br>DBL -1 மின்பிறப்பாக்கி |
| 11.<br>12.<br>13. | 30307 | படகு (DFAR 7267 ) -1<br>இயந்திரம் ( சுசுக்கி - 15 hp - 680548) -1<br>மின்பிறப்பாக்கி Work man நீலம் -1 |
| 14.<br>15. | 23993 | படகு (OFRPA - 0165TCO) - 1<br>மின்பிறப்பாக்கி - 1 |
| 16.<br>17.<br>18. | 30431 | படகு (OFRP - A - 3462CHW ,Desan marine NDA126) -1<br>இயந்திரம் (Suzuki- 25hp - 110933) -1<br>மின்பிறப்பாக்கி - 01Honda (சிவப்பு) |
| 19.<br>20. | B/372/19 | படகு (OFRP - A- 0598TCO Neil Marine) -1<br>இயந்திரம் ( Suzuki - 9.9hp - 511778)-1 |
| 21.<br>22. | B/375/19 | படகு (OFRP -A - 0238TCO 191 - GSM -238)-1<br>இயந்திரம் ( Suzuki 9 .9hp - 512424) -1 |
| 23.<br>24.<br>25.<br>26.<br>27. | 23695 | படகு (DM 878) - 1<br>மின்பிறப்பாக்கி சிவப்பு-1<br>மின்பிறப்பாக்கி வெள்ளை ELEDON - 1<br>இயந்திரம் யமஹா -1<br>இயந்திரம் சுசுக்கி - 1 (25hp 680028) - 1 |
| 28. | AR/256/19 | சுசுக்கி வெளியிணைப்பு இயந்திரம் |
| 29.<br>30.<br>31. | AR/803/16 | வள்ளம் - 02<br>தெப்பம் - 02<br>குல்லா - 01 |
| 32. | 3508 | மின்பிறப்பாக்கி (DB 950 சிவப்பு) -01 |
| 33. | 6590 | மின்பிறப்பாக்கி - 02 |
| 34. | 8805 | மின்பிறப்பாக்கி - 01 |
| 35. | 8807 | மின்பிறப்பாக்கி - 01 |
| 36. | 9168 | மின்பிறப்பாக்கி - 01 |
| 37. | 9169 | மின்பிறப்பாக்கி - 01 |
| 38. | 9172 | மின்பிறப்பாக்கி - (Honda 1000 - 1436139) - 01 |
| 39. | 19003 | மின்பிறப்பாக்கி - 01 |
| 40. | 23625 | மின்பிறப்பாக்கி - (RHINOMEC 1000) - 01 |
| 41. | 23640 | மின்பிறப்பாக்கி - 01 |
| 42. | 29801 | மின்பிறப்பாக்கி - 01 |
| 43. | 29802 | மின்பிறப்பாக்கி- (Honda சிவப்பு) - 01 |
| 44. | 29874 | மின்பிறப்பாக்கி - 01 |
| 45. | 29875 | மின்பிறப்பாக்கி - 01 |
| 46. | 30305 | மின்பிறப்பாக்கி - 01 |
| 47. | 31761 | மின்பிறப்பாக்கி - (வெள்ளை நிறம் DBL -950) - 2 |
| 48. | 5754 | நீர் இறைக்கும் இயந்திரம் (7015049 FMF ) -1 |
| 49. | 14375 | நீர் இறைக்கும் இயந்திரம் (EY20DK710055) -1 |
| 50. | 8804 | ஜெனரேற்றர் (சிவப்பு) - 01 |
| 51. | 3654 | பட்டறை இயந்திரம் - 1 |
| 52. | 9991 | பட்டறை இயந்திரம் (41613) - 1 |
| 53. | 9167 | பெற்றோமாக்ஸ் -1 |
| 54. | 20974 | Green tel தொலைபேசி - 01 |
| 55. | 5068 | துவிச்சக்கர வண்டி (SK 102089) - 1 |

| இல. | வழக்கு இலக்கம் | பொருட்கள் |
|---|---|---|
| 56. | 7289 | துவிச்சக்கர வண்டி (SP451066) -1 |
| 57. | 8485 | துவிச்சக்கர வண்டி (10AE 16155) -1 |
| 58. | 8987 | துவிச்சக்கர வண்டி (5C454012) -1 |
| 59. | 9658 | துவிச்சக்கர வண்டி (69328636) -1 |
| 60. | 10866 | துவிச்சக்கர வண்டி (LU 22606) -1 |
| 61. | 11451 | துவிச்சக்கர வண்டி (AA 10612) - 1 |
| 62. | 13184 | துவிச்சக்கர வண்டி (69628612) -1 |
| 63. | 13501 | துவிச்சக்கர வண்டி (79620419) -1 |
| 64. | 13663 | துவிச்சக்கர வண்டி (51195595) -1 |
| 65. | 15006 | துவிச்சக்கர வண்டி (69894197)-1 |
| 66. | 11055 | துவிச்சக்கர வண்டி (57138237) -1 |
| 67. | 15269 | துவிச்சக்கர வண்டி - 1 |
| 68. | 15989 | துவிச்சக்கர வண்டி (SK 101312) - 1 |
| 69. | 16113 | துவிச்சக்கர வண்டி (69593736) -1 |
| 70. | 17420 | துவிச்சக்கர வண்டி (1295K1593) -1 |
| 71. | 19661 | துவிச்சக்கர வண்டி - 1 |
| 72. | 29165 | துவிச்சக்கர வண்டி (69791098) -1 |
| 73. | 20166 | துவிச்சக்கர வண்டி (LU 00108) -1 |
| 74. | 30063 | துவிச்சக்கர வண்டி - 1 |
| 75. | | துவிச்சக்கர வண்டி (LU22606) -1 |
| 76. | B242/16 | துவிச்சக்கர வண்டி (AA10612) -1 |
| 77. | | துவிச்சக்கர வண்டி (69628612) -1 |
| 78. | B/980/15 | துவிச்சக்கர வண்டி (1600) -1 |
| 79. | B/697/15 | துவிச்சக்கர வண்டி (117597) -1 |
| 80. | B/192/16 | துவிச்சக்கர வண்டி (Girl 81287260) -1 |
| 81. | AR/149/16 | துவிச்சக்கர வண்டி -1 |
| 82. | AR/680/13 | துவிச்சக்கர வண்டி (08777680) -1 |
| 83. | AR/24/17 | துவிச்சக்கர வண்டி - 1 |
| 84. | AR/132/19 | துவிச்சக்கர வண்டி (6977488) -1 |
| 85. | AR/178/19 | துவிச்சக்கர வண்டி (69951700) -1 |
| 86. | AR/220/19 | துவிச்சக்கர வண்டி (69905123) -1 |
| 87. | AR/177/19 | துவிச்சக்கர வண்டி (69939551) - 1 |

| இல. | வழக்கு இலக்கம் | பொருட்கள் |
|---|---|---|
| 88. | | காஸ் சிலிண்டர் -1 சிறியது |
| 89. | AR/26/14 | காஸ் சிலிண்டர் - 1 பெரியது |
| 90. | | காஸ் கட்டர் - 1 |
| 91. | 25267 | சிலிண்டர் -1 |
| 92. | | காஸ் கட்டர் -1 |
| 93. | B/107/17 | நொக்கியா வகை தொலைபேசி -1 |
| 94. | AR/08/19 | Samsung கையடக்கத் தொலைபேசி - 1 |
| 95. | 9427 | பெற்றோமக்ஸ்-1 |
| 96. | 17384 | மின்பிறப்பாக்கி (DBL) -1 |
| 97. | | நீர் இறைக்கும் இயந்திரம் (7009289)-1 |
| 98. | 3182 | பெரிய சிலிண்டர் - 3 |
| 99. | | சிறிய சிலிண்டர் - 2 |
| 100. | 5993 | மின்பிறப்பாக்கி - 01 |
| 101. | 5994 | மின்பிறப்பாக்கி- 01 |
| 102. | AR/242/17 | வள்ளம் - 2 |
| 103. | | குல்லா - 9 |
| 104. | | வள்ளம்- 12 |
| 105. | AR/397/18 | தெப்பம் - 05 |
| 106. | | காஸ் சிலிண்டர் - 2 |
| 107. | 2963 | ஒட்சிசன் சிலிண்டர் - 5 |
| 108. | | காஸ் கட்டர்- 1 |
| 109. | | ஒட்சிசன் சிலிண்டர் -1 |
| 110. | | ஒட்சிசன் சிலிண்டர் -1 |
| 111. | | ஒட்சிசன் சிலிண்டர் -1 |
| 112. | | ஒட்சிசன் சிலிண்டர் -1 |
| 113. | | ஒட்சிசன் சிலிண்டர் -1 |
| 114. | | ஒட்சிசன் சிலிண்டர் -1 |
| 115. | | ஒட்சிசன் சிலிண்டர் -1 |
| 116. | | ஒட்சிசன் சிலிண்டர் -1 |
| 117. | | முடிவடைந்த வழக்குகளின் சவள் - 178 |
| 118. | | முடிவடைந்த வழக்குகளின் மண்வெட்டி -25 |

8-999

## ஆய விற்பனையும் குத்தகையும்

### 2020 ஆம் ஆண்டுக்காக கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை

### திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவு

2020ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் கள்ளுத்தவறணைகளில் பதப்படுத்தப்பட்ட கள்ளை சில்லறை விலைக்கு விற்பனை செய்யும் பூரண அதிகாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள விற்பனை நிபந்தனைகளுக்கும் கீழ்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்ட வகையில் 2019.09.25ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கள்ளுத் தவறணை குத்தகையைப் பெற்றுக்கொள்ள முன்வருவோர் உரிய கேள்விப்பத்திரப் படிவமொன்றை முறையாக நிரப்பி கீழே காட்டப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைப் பட்டியலில் விதிக்கப்பட்டுள்ள விலைமனுப் பணத்தைக் கொடுப்பனவு செய்து பெற்றுக்கொள்ளப்படும் பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டொன்றையும், பிரகடனப்படுத்தப்பட்ட குத்தகை நிபந்தனைகளுக்கமைய பெறப்பட்ட சொத்துச் சான்றிதழொன்றையும் உள்ளடக்கியதாக இலச்சினை பொறிக்கப்பட்ட கடித உறையொன்றில்

இட்டு அதன் இடப்புற மேல் மூலையில் தம்மால் விலைமனுச் செய்யப்படுகின்ற தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி ஒவ்வொரு தவறணைக்குமென இங்கே காட்டப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் பதிவுத்தபாலின் மூலம் அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலம் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்குக் கிடைக்கச்செய்ய முடியும்.

3. கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பவர் கேள்விப்பத்திரத்தை நிரப்புகையில் கேள்விப்பத்திரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு திருத்தத்தையும் தமது கையொப்பத்தின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதித் தினமான 2019.09.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பிரதேச செயலகத்திற்கு வருகை தரல் வேண்டும்.

5. எவ்வித தகவல்களையும் உள்ளடக்காத கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு உண்டு.

6. மேற்குறித்த தினத்தில் விற்பனை செய்ய முடியாமல் போகின்ற கள்ளுத் தவறணையின் மீள் விற்பனை 2019.11.28 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மேற்கொள்ளப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தலும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக அமைந்திருத்தல் வேண்டும்.

7. இச் சலுகையைக் கொள்வனவு செய்பவர் தொடர்பாக பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர், அவ்வாறு பிரகடனம் செய்யப்பட்ட தினத்தன்று அதாவது குத்தகை விற்பனைத் தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்னர் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற இரண்டு மாதங்களுக்கான குத்தகைப் பணத்தினைவிட அதிகமான ஒரு தொகையை பிணையாகச் செலுத்தி தவறணை தொடர்பான நிபந்தனைகளுக்குக் கைச்சாத்திடல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கின்றபோது அறிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களிருப்பின், அவற்றை திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

யூ. டபிள்யூ. ரீ. யூ. ராஜகருணா,
பிரதேச செயலாளர்,
திவுலப்பிட்டிய.

பிரதேச செயலகம்,
திவுலப்பிட்டிய,
2019, ஓகத்து 13.

**அட்டவணை**

| இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 27 – தாகொன்ன | திவுலப்பிட்டிய | தாகொன்ன | முற்பகல் 11.00<br>பிற்பகல் 5.00 | பிற்பகல் 2.00<br>பிற்பகல் 8.00 | 4,000 | 2019.09.25<br>முற்பகல் 10.30 |

8-1068

---

**மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு கோட்டைமுனை TT - 2 ஆம் இலக்க கள்ளுத் தவறணைக்கான குத்தகை விற்பனை**
**2019, யூலை – 2020 யூன்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஒகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளிவந்த 1982ஆம் வருட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட கோட்டைமுனை கள்ளுத்தவறணைக்கான 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2020, யூன் மாதம் 30ஆந் திகதி வரையுள்ள கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை மண்முனை

வடக்கு பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஐந்நூறு ரூபா (ரூபா500) பணத்தை மண்முனை வடக்கு வாகரை பிரதேச செயலாளரின் பெயரில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டின் பிரதியையும் , பெறுமதிச் சான்றிதழின் பிரதியையும் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2019.09.06 ஆந் திகதி முதல் 2019.09.12ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழின் மூலப்பிரதி கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் இப் பெறுமதிச் சான்றிதழுடன் காணிப் பதிவாளரினால் வழங்கப்படும் காணி வரலாற்றுச் சுருக்கப் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (இது கேள்விப்பத்திரம் விநியோகிக்க ஆரம்பிக்கப்பட்ட தினத்திற்குப் பிந்திய தினத்தில் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

3. கேள்விப் பத்திங்களை சமர்ப்பிக்கும் கடித உறையினுள் தங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் பிரதிகளை இன்னுமொரு கடித உறையினுள் இட்டு அதனை மூடி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தாலும் மேற்படி இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்படாமலிருந்தாலும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பிப்பின் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

6. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

7. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். (நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)

7. ஏனைய விபரங்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வ. வாசுதேவன்,
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்.

பிரதேச செயலகம்,
மண்முனை வடக்கு.
மட்டக்களப்பு.

**கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்**

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் — திகதி | நேரம் |
|---|---|---|---|
| மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் | TT No. - 2 | 2019.09.12 | பி.ப. 3.00 மணி |

**குறிப்பு.-** 1. கேள்விச் சபை 2019.06.19 ஆந் திகதி பி.ப. 3.00 மணிக்குக் கூடும்.

2. விற்பனைத் தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2019.09.23 ஆந் திகதி பி.ப. 3.00 மணிக்கு நடைபெறும்.

8- 1114

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஓதென்டிக் இன்டியன் பிரியாணி ரெஸ்டோரண்ட் (பிறைவட்) லிமிடட்
பதிவிலக்கம் : பீவீ 00212842
பதிவு முகவரி : இல.33, ஆமர் வீதி, கொழும்பு 12
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.06.21

கம்பனிச் செயலாளர்.

8-982

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சிலோன் பிளான்ட் ஃபுட் (பீவீடீ) எல்டிடீ
பதிவிலக்கம் : பீவீ 00211991
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.05.24
பதிவு முகவரி : புஜ்ஜம்பொல , லிஹிரியாகம

கம்பனிச் செயலாளர்கள்.

8-983

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், கீழ் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் :ஏசியா லெஷர் ஹில்ஸ் (பிறைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 00214053
பதிவு முகவரி : 102, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 4

கம்பனிச் செயலாளர்.

8- 1000

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் , குறிப்பிட்ட பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் பெயர் : ஆர்டிக் இன்போர்மேஷன் டெக்னொலொஜீஸ் (பீவீடீ) எல்டீடி
பதிவிலக்கம் : பீவீ 00212879
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.06.22
பதிவு முகவரி : இலக்கம் 42/16, பான்ஸ் ரத்வத்த மாவத்தை, பலாங்கொட

கம்பனிப் பணிப்பாளர்.

8- 1019

## மை வே லெஷர் லிமிடட்

### (அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைத்தல்)

### கம்பனியின் பதிவு இல. பீபி 5008

### கம்பனியின் இறுதி பொதுக்கூட்டத்திற்கும் கலைத்தலுக்குமான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2) ஆம் பிரிவிற்கமைவாக மேற்படி கம்பனியின் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியளவில் மை வே லெஷர் லிமிடட், இலக்கம் 290, டி .ஆர் .விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற இடத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தலுக்கான கணக்கு விபரங்களை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது. அத்துடன் ,

1. கலைத்தல் நடைபெற்ற விதம். மற்றும்,

2. கம்பனியின் சொத்துக்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை பங்குதாரர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட முறை. மற்றும்,

3. இவை பற்றிய மேலதிக விளக்கம் ஏதேனும் தேவைப்படின், அவை பற்றிய விளக்கங்களும் அளிக்கப்படும்.

சிறில் சந்திரரத்ன,
(பட்டயக் கணக்காளர்),
கலைப்பலுவலர்,
மை வே லெஷர்லிமிடட்.

8- 1022

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : செத் ஸ்டேஷனரி (பிறைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 00211676

*பதிவு செய்யப்பட்ட முகவரி: இல. 318/ 3, சிரிமங்கலவத்த வீதி, மாம்பே, பிலியந்தல*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.05.11*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

*8- 1037*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ள தென அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : லீடர்ஸ் ஸ்டேஷனர்ஸ் (பிறைவட்) லிமிட்டட்*
*பதிவிலக்கம் : பீவீ 00213071*
*பதிவு செய்யப்பட்ட முகவரி: இல.10, மலிபன் வீதி, கொழும்பு 11*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.06.28*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

*8- 1038*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ள தென அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : டினால் ஹோல்டிங்ஸ் (பிறைவட்) லிமிட்டட்*
*பதிவிலக்கம் : பீவீ 00212438*
*பதிவு செய்யப்பட்ட முகவரி: இல.111/11, 3 ஆம் ஒழுங்கை, நிவந்திடிய, போகுந்தர, பிலியந்தல ( 10300)*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.06.08*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

*8- 1069*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ள தென அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : ஒவின்ரோ ஹொடெல் சப்லயர்ஸ் (பிறைவட்) லிமிட்டட்*
*பதிவிலக்கம் : பீவீ 89271*
*பதிவு செய்யப்பட்ட முகவரி: இல.570/4, பதல்வத்த வீதி, அரவ்வல, பன்னிப்பிட்டிய*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2012.11.08*

கம்பனிச் செயலாளர்.

*8- 1107*

## பொதுஅறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவுக்கமைய , வரையறுக்கப்பட்ட புறொண்டியல் கெப்பிட்டல் லங்கா (தனியார்) நிறுவனம் ( பீவீ 74570) வரையறுக்கப்பட்ட எவலூஷன் கப்பிட்டல் ( தனியார்) நிறுவனம் ( பீவி 75891) மற்றும் வரையறுக்கப்பட்ட லண்டேர்ன் வில்லா ( தனியார்) நிறுவனம் (பீவீ 75942) என்பனவற்றை இணைப்பதற்கான அறிவித்தல்.-*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(3)* (b) *ஆம் பிரிவுக்கமைய, வரையறுக்கப்பட்ட புறொண்டியர் கப்பிட்டல் லங்கா (தனியார்) நிறுவனம் (புறொண்டியர் கப்பிட்டல்) எவலூஷன் கப்பிட்டல் (தனியார்) நிறுவனம் (எவலூஷன் கப்பிட்டல்) மற்றும் வரையறுக்கப்பட்ட லண்டேர்ன் வில்லா (தனியார்) நிறுவனம் (லண்டேர்ண் வில்லா) என்ற மூன்று நிறுவனங்களினதும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், கம்பனிகள் சட்டத்தின் 242(1)* (b) *ஆம் பிரிவுக்கமைய புறொண்டியர் கப்பிட்டல், எவலூஷன் கப்பிட்டல் மற்றும் லண்டேர்ன் வில்லா என்பனவற்றை ஒன்றிணைக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி யுள்ளனர்.*

*இணைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர், வரையறுக்கப்பட்ட புறொண்டியர் கப்பிட்டல் லங்கா (தனியார்) நிறுவனம் என்பதாக அமையும். அத்துடன் மேற்படி இணைவு 2019, ஒற்றோபர் 15 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் அல்லது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் திகதியில் அமுலுக்கு வரும்.*

*கம்பனிகள் சட்டத்தின் 242(4) ஆம் பிரிவுக்கமைய கூட்டிணைப்பினை அங்கீகரிக்கும் தீர்மானங்கள் கூட்டிணைப் பிற்கான முன்மொழிவுகளாக கருதப்படும். இவை இந் நிறுவனங்களின், கடன் தருனர்கள் மற்றும் பங்குதாரர்கள், கம்பனிகள் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என அனைவரும் வேலை நேரங்களில் பார்வையிடக் கூடிய வகையில் "ஹேமாஸ் ஹவுஸ்" , இல. 75, பேபுறூக் பிளேஸ், கொழும்பு 02 எனும் முகவரியில் வைக்கப்பட்டிருக்கும்.*

பணிப்பாளர் சபையின் கட்டளைக்கிணங்க,

வரையறுக்கப்பட்ட புறொண்டியர்
கப்பிட்டல் லங்கா ( தனியார் ) நிறுவனம்
வரையறுக்கப்பட்ட ஹேமாஸ் கோர்பரேட்
சேர்விசஸ் ( தனியார் ) நிறுவனம்,
செயலாளர்கள்.

எவலூஷன் கப்பிட்டல் (தனியார்) நிறுவனம்
வரையறுக்கப்பட்ட ஹேமாஸ் கோர்பரேட்
சேர்விசஸ் (தனியார்) நிறுவனம்,
செயலாளர்கள்.

வரையறுக்கப்பட்ட லண்டேர்ன்
வில்லா( தனியார்) நிறுவனம்,
வரையறுக்கப்பட்ட ஹேமாஸ் கோர்பரெட்
சேர்விசஸ் ( தனியார் ) நிறுவனம்,
செயலாளர்கள்.

*8- 1048*

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இராஜகிரிய , நாவல, டி மெல்வத்த வீதி, இல. 40 என்னும் முகவரியில் குடியிருக்கும் (தே.அ.அ.இல. 633120250X மற்றும் இலங்கை கடவுச்சீட்டு இல. N 5305523) ஹேமந்த சிரிமெவன் பண்டார ஹேரத் ஆகிய நான், இராஜகிரிய , நாவல டி மெல்வத்த வீதி, இல. 40 என்னும் முகவரியில் குடியிருக்கும் மெல்வின் ஹேரத் என்பவருக்கு வழங்கப்பட்ட கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எட்மன்ட் லக்ஷ்மன் திரிமான்ன என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட இல. 183 மற்றும் 1999.01.10 ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்து செயலிழக்கச் செய்துள்ளதாக இதன் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவிப்பதோடு இன்று முதல் எனது அற்றோணித்தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

ஹேமந்த சிரிமெவன் பண்டார ஹேரத்.

8-1089

---

### அற்றோணித்தத்துவ அதிகாரத்தை இரத்துச் செய்வதற்கான அறிவித்தல்

கொட்டுகொட ,குருகேவத்த, 3 ஆம் ஒழுங்கை, இல. 683/36B என்ற இடத்தில் குடியிருக்கும் மடிஹேர ஆராச்சிகே அனுஷா தர்ஷனி குணவர்தன ஆகிய நான், 2000.07.18 ஆந் திகதி திரு. ஜீ.ரீ. சிறிவர்தன, சட்டத்தரணியால் எழுதி உறுதி செய்யப்பட்டதும் தினப்பதிவேடு இல. 212 மற்றும் போலியோ இல. 68 மற்றும் வோல்யூம் இல. 5911 கொண்ட பத்தரமுல்லை பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் 2000.07.24 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டதுமான அற்றோணிதத்துவப் பத்திர இல. 118 மூலம் திரு. குருகுலசூரியகே ஸ்டீபன் அலோசியஸ் பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவ அதிகாரத்தை, எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக இரத்துச் செய்கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

மடிஹேர ஆராச்சிகே அனுஷா தர்ஷனி குணவர்தன.

8-1090

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஜா-எல, மா எலிய"பெதெல்" குடியிருக்கும் ஜயந்தி சிசில் பர்னாந்து ஆகிய நான், (வெளிநாட்டு கடவுச் சீட்டு இல. N 1795264 ) கம்பஹா, மினுவன்கொடை, இல. 72 என்னும் முகவரியில் குடியிருக்கும் பிரேமில் சுரேஷ் கமகே (தே.அ.அ.இல. 672360757V) என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு ரீ. ஏ. சுனில் பிரனாந்து என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 580 மற்றும் 2007.09.02 ஆந் திகதிய அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்து செயலிழக்கச் செய்துள்ளதாக இதன் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவிப்பதோடு இன்று முதல் எனது அற்றோணித்தத்துவகாரரான பிரேமில் சுரேஷ் கமகேயால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

ஜயந்தி சிசில் பர்னாந்து.

8- 1091

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 927/ 1, எகிரிகுல மாவத்தை, கொட்டாவ, பன்னிப்பிட்டிய இலங்கையைச் சேர்ந்த மஹமுதியன்செலாகே ஸ்ரீயானி பெரேரா ஆகிய நான், 11884 ஆம் இலக்க 2018.09.18 ஆந் திகதியிடப்பட்ட 235/4, பெலன்வத்த, பன்னிப்பிட்டியவைச் சேர்ந்த மஹமுதியன்செலாகே ரஞ்சித் பெரேராவுக்கு என்னால் வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு ஏ. பிரேமசீலியால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணித்தத்துவம் 2019.08.18 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளதை அறியத்தருகின்றேன். குறித்த திகதிக்குப் பின்னர் எனது சார்பாக குறித்த அற்றோணித்தத்துவத்தால் நிகழ்த்தப்பட்ட எந்தவொரு பரிவர்த்தனைக்கும் நான் பொறுப்பல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

மஹமுதியன்செலாகே ஸ்ரீயானி பெரேரா.

8- 1092

---

## ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஏ.பீ.பெர்னாண்டோ - ஏக உரிமையாளர் ரன்கிரி
கணக்கு இல.: 0090 1000 0111

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2017.06.29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2017.09.08 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2017.09.29 ஆந் திகதிய "திவயின" (Divaina), மற்றும் 2017.09.26"ஜலண்ட்" (Island), "தினக் குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே ஐம்பத்தி நான்கு இலட்சத்து நாற்பத்தி எட்டாயிரத்து எழுநூற்றி ஐம்பத்து ஒன்பது ரூபா பத்தொன்பது சதம் (ரூபா 1,54,48,759,.19) 2017, யூன் 13 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே பதினெட்டு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து எழுநூற்றி மூன்று ரூபா

பதினேழு சதம் (ரூபா 1,18,57,703.17) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) மேலும் பதினெட்டு இலட்சம் ரூபா (ரூபா 18,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறியின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்ட வணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நில மனைகளை கண்டி உத்தரவு பெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2019. 09.20 ஆந் திகதி இல. 3842 எனும் வரைபடத்தில் லொட் 1, பி.ப. 2.30 மணி முதல், 3842 எனும் வரைபடத்தில் லொட் 2, பி.ப. 2.45 மணி முதல், 3842 எனும் வரைபடத்தில் லொட் 8, பி.ப. 3.00 மணி முதல் மற்றும் 3842 எனும் வரைபடத்தில் லொட் 9, பி.ப. 3.15 மணி முதல் அதே இடங்களில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், தம்புள்ளை பிரதேச செயலாளர் பிரிவு வகபனாஹா பல்லேசியே பத்து தம்புள்ளை மா நகர சபை எல்லைகளுக்குள் ரத்மல்காஹாஹெல கிராம அலுவலர் பிரிவிற்குள் ரத்மல்காஹாஹெல கிராமத்தில் அமைந்த "லீனியகொல்லெயாய" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எச். விஜயதுங்க என்பவரால் தயாரிக்கப் பட்ட 2008, யூலை 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 3842 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : தம்புள்ளை முதல் கன்டளம் வரையான பிரதான வீதி; கிழக்கு : ஜயசிங்ஹ உரிமம் கோரும் காணி; தெற்கு: இங்கமைந்த லொட் 4 மற்றும் ; மேற்கு : கூறப்பட்ட வரைப்படத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 13 வீதிக்காக ஒதுக்கப்பட்டது (6மீ. அகலம்) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த விஸ்தீரணம் இருபது பேர்ச் (0ஏ. 0றூ. 20பே.) அல்லது 0.05058 ஹெக்டேயர் விஸ்தீரணத் தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்து முடன் கூறப்பட்ட இல. 3842 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D510/244 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட ரத்மல்காஹாஹெல கிராமத்தில் அமைந்த "லீனியகொல்லெயாய" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எச். விஜயதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, யூலை 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 3842 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : தம்புள்ளை முதல் கன்டளம் வரையான பிரதான வீதி ; கிழக்கு : கூறப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 13 வீதிக்காக ஒதுக்கப்பட்டது (6மீ. அகலம்); தெற்கு: இங்கமைந்த லொட் 3 மற்றும் ; மேற்கு : விஷ்வநாதன் உரிமம் கோரும் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது பேர்ச் (0ஏ. 0றூ. 20பே.) அல்லது 0.05058 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3842 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D510/245 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட இல. 3842 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 13 (6மீ. அகலம்) வீதி ஒதுக்கத்தின் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

இலக்கங்கள். 2222, 2347, 490, 178 மற்றும் 67 எனும் பிணை உறுதிகள் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், தம்புள்ளை பிரதேச செயலாளர் பிரிவு வகபனாஹா பல்லேசியே பத்து தம்புள்ளை மா நகர சபை எல்லைகளுக்குள் ரத்மல்காஹாஹெல கிராம அலுவலர் பிரிவிற்குள் ரத்மல்காஹாஹெல கிராமத்தில் அமைந்த "லீனியகொல்லெயாய" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். விஜயதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, யூலை 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 3842 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 8 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இங்கமைந்த லொட் 5; கிழக்கு : ஜயசிங்ஹ மற்றும் கலுபண்டா உரிமம் கோரும் காணி; தெற்கு: இங்கமைந்த லொட் 9 மற்றும் ; மேற்கு : இங்கமைந்த லொட் 13 என குறிப்பிடப்பட்ட வீதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பன்னிரெண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3842 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் D510/256 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட ரத்மல்காஹாஹெல கிராமத்தில் அமைந்த "லீனியகொல்லெயாய" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எச். விஜயதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, யூலை 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 3842 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 9 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இங்கமைந்த லொட் 8; கிழக்கு : ஜயசிங்ஹ மற்றும் கலுபண்டா உரிமம் கோரும் காணி; தெற்கு : இங்கமைந்த லொட் 12 மற்றும்; மேற்கு : இங்கமைந்த லொட் 13 எனக் குறிப்பிடப்பட்ட வீதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பன்னிரெண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3842 எனும் வரைபடத் திற்கு அமைவாக மாத்தளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D510/257 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட இல. 3842 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 13 (6மீ. அகலம்) வீதி ஒதுக்கத்தின் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

இலக்கங்கள் 488, 556 மற்றும் 65 எனும் பிணை உறுதிகள் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8- 1084

---

**டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ**
**(முன்னர் டிஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டது)**
**பெறுமதிமிக்க சொத்து**
**ஏல விற்பனை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறிவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

2773 மற்றும் 2775 ஆம் இலக்கப் பிணை உறுதிகள் மூலம் ஈடு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்

வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவு, விலாச்சிய கோரளே வடக்கு, 338 ஆம் இலக்க சிங்காரகம கிராம அலுவலர் பிரிவு, சிங்காரகம கிராமத்தில் அமைந்துள்ள 1995, நவெம்பர் 27 ஆந் திகதிய ANU/ No/ Pra/ 532 ஆம் இலக்க சொத்துரிமை மூலம் குறிப்பிடப்பட்ட, அனுதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் ஏ. எம். பி. ரத்னசிறி அவர்களால் வரையப்பட்ட, 2002, நவெம்பர் 03 ஆந் திகதியிடப்பட்ட 5660 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்: 00ஏ. 01றூ. 15.4பே.**

அதிலுள்ள கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக.

அநுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு யூ. விஜேரத்ன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட , 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதியிடப்பட்ட 2773 மற்றும் 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதியிடப்பட்ட 2775 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அநுராதபுரத்தைச் சேர்ந்த தென்னகோன் முதியான்சேலாகே லக்ஷ்மன் தென்னகோன் மற்றும் கீரலாகே சந்திரலதா ஆகியோரால் டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ க்கு ( டிஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ யின் பதிலாள்) ஈடு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

டிஎப்சீசீ வங்கி பீஎல்சீயினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத் தின்படி 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19ஆந் திகதி வியாழக் கிழமை மு.ப. 11.00 மணிக்கு அநுராதபுரத்திலுள்ள டிஎப்சிசி வங்கி யின் கிளை வாளாகத்தில் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு முறை**: ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10 % (பத்து சதவீதம்);
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 01% விற்பனை வரி (ஒரு சதவீதம்);
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்;
(4) மொத்த விளம்பரச் செலவான ரூபா 153,000.00 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 1000.00;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2000.00.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011-2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டிஎப்சீசீ வங்கி பீஎல்சீயின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
'ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்,
127வருட கால மகோன்னத சேவை அனுபவம்.'

தலைமை அலுவலகம் :
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி : 081-2227593
தொலைபேசி/பெக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671467, 011-2671468
தொலைபேசி/பெக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com
இணைய தளம்: www.sandslanka.com

8- 980

## நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்*

### முதலாவது அட்டவணை

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகரம், கிரவட்ஸ் மாவட்ட செயலாளர் எல்லையில் திருகோணமலை நகர சபை எல்லையில் கிராம அலுவலர் பிரிவில் ஓர்ஸ் இல. 244F, கிராம அலுவலர் எல்லையில் வாட் இலக்கம் 03, கொன்வன்ட் கட்டிடம் இலக்கங்கள் 295A/ 2 மற்றும் 295A/1 , கோட்ஸ் ரோட், திருகோணமலையில் அமைந்துள்ள திருகோணமலை நில அளவையாளர் ஆர். பொன்னுசாமி 2007.07.15 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 1852 இல் காண்பிக்கப்பட்ட லொட் A மற்றும் இதில் உள்ள கட்டிடங்கள் மற்றும் பொதுப் பாதையான லொட் D, பாவிக்கும் உரிமையுடனும் .

இக்காணியின் விஸ்தீரணம்: 0ஏ.0றூ.10.40 பே. இக்காணி திருகோணமலை காணிப்பதிவகத்தில் A 116/63 இல் பதிவு செய்யப்பட்ட காணியாகும்.

மேற்சொல்லப்பட்ட காணி திருகோணமலை நில அளவையாளர் எஸ். கமலரங்கன் 2017.07.20 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 6556 இன் படி, மீண்டும் அளந்து லொட் 01 என்று காண்பிக்கப்பட்ட இக்காணி கட்டிட இலக்கம் 295A/2 மற்றும் 295A/1 கோட் ரோட், திருகோணமலை, வாட் இலக்கம் 03, கொனவன்ட் இலக்கம் 244F, மயனவெளி கிராம அலுவலர் எல்லையில் மற்றும் திருகோணமலை கிராம அலுவலர் எல்லையில் மற்றும் திருகோணமலை நகர மற்றும் கிரவட்ஸ் மாவட்ட செயலாளர் தொகுதியில் திருகோணமலை மாவட்டம், கிழக்கு மாகாணம் மற்றும் இக்காணியில் உள்ள கட்டிடங்கள் மற்றும் பொதுவான பாதை லொட் D, பாவிக்கும் உரிமையுடனும் , இக்காணியின் விஸ்தீரணம்: 0ஏ.0றூ.10.40 பே. .

### இரண்டாவது அட்டவணை

